


புலேந்திரன் - குமரப்பா முதலான போராளிகள் இலங்கை -இந்திய கூட்டுச் சதிக்குப் பலியானதைத் தொடர்ந்து 'இனி யுத்த நிறுத்தம் இல்லை' என தலைவர் பிரபாகரன் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் ஒரு கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றது. இலங்கை மக்களின் பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் இலங்கை இராணுவம், இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் உலா வருகையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. இந்திய இராணுவத்தினரின் வாகனங்களைத் தவிர்த்து, இலங்கை இராணுவத்தைக் குறிவைத்து, மிகத் துல்லியமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என இலண்டன் பி. பி. சி. வர்ணித்தது. இந்த வர்ணனை அக்காலத்தில் பிரபலமாக இருந்தது.

இத்தாக்குதலில் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பதிகாரியும் சிரேட்ட பொலிஸ் அத்தியட்சருமான நிமால் டி சில்வாவுடன் ஒன்பது இராணுவத்தினரும் பலியாகினர். அவ்வளவு திறமையான இத்தாக்குதலை மேற்கொண்டவன்தான் மேஜர் அகத்தியர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், கல்வி ஆறு என சிறப்பாகக் குறிப்பிடப்படும் கோட்டைக் கல்லாறுப் பகுதியைச் சேர்ந்த இவன், 1984 ஆம் ஆண்டு புலிகளுடன் தன்னை இணைத்துக்கொண்டான். விடுதலைப் புலிகளின் ஐந்தாவது முகாமில் பயிற்சி பெற்றுக்கொண்ட இவன், மருத்துவக் குழுவினருக்கான விசேட பயிற்சியையும் மேலதிகமாகப் பெற்றுக்கொண்டான். மீண்டும் இந்த மண்ணில் அவன் மருத்துவனாக காலடி எடுத்துவைத்தாலும், திறமை மிக்க ஒரு போராட்ட வீரனாகவே இனங்காணப்பட்டான். அதனாலேதான், அபாயகரமான பகுதிகள் எனக்கருதப்படும் பகுதிகளில் நடத்த உத்தேசிக்கப்படும் தாக்குதல்கள் இவனிடம் ஒப்படைக்கப்பட்டன.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள வந்தாறுமூலை அம்பலத்தடிச் சந்தி, எமது போராளிகளில் கணிசமான பேரை பலிகொண்ட இடமாகும். ஏனெனில் இப்பகுதியில் இருந்தே எமது பயிற்சி முகாம்களுக்கான உணவுப் பொருட்கள் விநியோகிக்கப் படுவதுண்டு. எனவே இப் பாதை மீது சிறீலங்காப் படையினருக்கு எப்போதுமே குறியிருக்கும். இப்பகுதியில் துப்பாக்கிச் சன்னத்தைக் காணாத சுவர்களே இல்லையெனலாம். ஆனால், இந்த அபாயகரமான பாதையில் சண்டையிடத்தான் இவனுக்கு விருப்பம். தன்னைப் போலவே ஏனைய போராளிகளையும் உருவாக்கினான். ஒரு கட்டுப்பாடான ஒழுக்கமான போராளியால் தான் ஒரு சிறந்த தலைமையை அளிக்கமுடியும். எனவே கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பன போராளிகளுக்கு வேண்டும் என வலியுறுத்துவான்.

மட்டக்களப்பு படுவான்கரைப் பகுதியைப் பற்றி போராளிகள் குறிப்பிடும் போது 'ஓடிணா வெளி, விழுந்தா வெளி' என்று குறிப்படுவார்கள். அப்படியான இயற்கை அமைப்பைக்கொண்ட அந்தப் பிரதேசத்தின் பொறுப்பாளனாக இவன் நியமிக்கப்பட்ட காலத்தில், இவன் எவ்வாறு போராளிகளைக் காப்பாற்றினான் என்பதை அறியும் போது ஒவ்வொருவர் நெஞ்சும் புல்லரிக்கும்.

மட்டக்களப்பில் இருந்து வளைந்து நீண்டுவரும் அந்த வாவிக்கரையில், தொம்பலும் (சேறு) கன்னாப்பற்றைகளும் ஒட்டு என்று அழைக்கப்படும் தாவரங்களும் நிறைந்திருக்கும் இப்பகுதிக்குள் இடுப்பளவு தண்ணீருக்குள்ளும் அதற்கு மேலும் இந்தப் பற்றைகளிடையே தடிகளினால் அரண் அமைத்து அவற்றையே முகாம் ஆக்கியிருந்தான். தேசத்துரோகிகள், எமது காற்றையே அசுத்தப் படுத்தும் வகையில் நிறைந்திருக்கும் இந்தியப் படையினர் இவர்களின் பார்வையில் படாது அந்த வயல்வெளிகளைக்கடந்து குளிர், நுளம்புத் தொல்லை மிகுந்த இந்த நீர்நிலை முகாம்களுக்குச் செல்வதென்றால் அதற்கு எவ்வளவு கவனம் தேவை. இந்த முகாம்களில் இருந்தே ஏனைய இடங்களுடன் தகவல் தொடர்பு எடுக்க வேண்டும். தொலைத் தொடர்புக் கருவிக்கு வேண்டும் பற்றரி கொண்டு செல்வதென்றால் கூட இலேசானதல்ல. ஆனால், இவன் அதையெல்லாம் செய்துகாட்டினான். அங்கிருந்தே தாக்குதலுக்குத் திட்டமிட்டான், போராடினான். இதற்கான மக்கள் பலத்தையும் திரட்டினான்.

இதனால்தான் 'புலிகளுக்கு குளிருக்கு போர்வையோ, உணவோ தேவையில்லை. ஆயுதங்களைக் கடலிற்குள் கூடப் புதைத்து வைத்தனர். இருட்டில்கூட அவற்றைத் தேடி எடுத்தனர் என பம்பாயில் வீக்லி இதழுக்கு பேட்டி அளித்தார் இந்தியப்படை எம் மீது போர் தொடுத்த காலத்தில் அதற்குப் பொறுப்பாயிருந்த இந்தியப்படை அதிகாரி.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இதேபோல வந்தாறுமூலைப் பகுதிக்கு அப்பால் முகாம்களை அமைக்கும்போது இயற்கையினை போராளிகளுக்கு அரணாக்கித் தந்தான். மலைகளுக்குப் பக்கத்தில் உள்ள குகைகளே பாதுகாப்பு அரண்கள். விமானக்குண்டு வீச்சின்போதும் எறிகணைத் தாக்குதல்களின்போதும் குகைகளுக்குள்ளேயே தனது வாரிசுகளைப் பாதுகாத்தான். உணவைப் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 15 மைல் தூரம் நடந்துவரும்போது முன்னே செல்வது இவன் தான். ஏனையோரைவிட கூடுதலான பாரம் சுமப்பதும் இவன்தான். ஆம்.... போராட்டத்தினுள் உள்வாங்கப்படும் போராளிகளுக்கு இவன் புத்தகமாகத் திகழ்ந்தான்.

எமது தேசத்தை குடியேற்றத்தின் மூலம் அபகரிக்க முயலும் பேரினவாதிகளுக்கு, இவன் கனவிலும் பயமூட்டிக்



மேஜர் அகத்தியர்

கொண்டிருந்தான். இவனது தாக்குதல்கள் அவர்களைச் சொந்தப் பிரதேசங்களுக்கு ஓடவைத்தன. இந்திய இராணுவத்தினரின் காலத்தில் இவற்றைச் செய்வதென்பது சுலபமாக இருக்கவில்லை.

ஒருமுறை நீண்ட தொலைவில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களின் இலக்குமீது தாக்குதல் தொடுத்துவிட்டு வந்துகொண்டிருந்தனர் இவனும் இவனது வாரிசுகளும். அனைவருக்கும் நல்ல பசி. சோர்ந்து வாடினார்கள். போராட என்று வெளிக்கிட்டால் எதையும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்று கூறி, அவர்களை ஒருவாறு சமாளித்துகூட்டிக் கொண்டு வந்தான். இதே நேரம் சிங்களப்படை கொடுத்த தகவலின்பேரில் இந்தியப்படை இவர்களைத் தொடர்ந்துகொண்டிருந்தது. இவர்கள் அவர்களைக் காணவில்லை.

அந்தளவுக்கு பசி, இவர்கள் கண்ணை மறைத்திருந்தது. முகாமுக்குச் சென்று அனைவரும் வாயில் உணவை வைத்ததுதான் தாமதம், இந்தியப்படையின் துப்பாக்கி வேட்டுக்கள் எல்லாவற்றையும் மறக்கவைத்தன. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியேறி இந்தியப்படையை எதிர்க்க இன்னொரு பாதையில் காத்திருந்தனர். ஏனெனில் இது எமது நாடு. நாம் ஓடமுடியாது. ஓட வேண்டியவர்கள் எல்லை தெரியாது எம்மண்ணை மிதித்தார்களே. ஆனால் இந்தியர்கள் வரவேயில்லை. ஏனோ தெரியாது. அப்படியே போய்விட்டனர்.

அக்காலங்கள் மிக வேதனை நிறைந்தவை. பல இடங்களில் பாதுகாப்புக்காக இந்தி மொழி பேசியே பாதையைக் கடக்கவேண்டிய தேவையை ஏற்படுத்தின. இந்தியை விரட்ட பல கட்டங்களில் இந்தி மாதிரிமொழியில் பேசினான் அகத்தியர்.

பின்னர் மட்டக்களப்பு பிராந்தியத்தை விட்டு, வன்னிக் காடுகளுக்கு நெருக்கமானான் இவன். அங்கும் பல தாக்குதல்களில் கலந்துகொண்டான். இறுதியில் முசல்குத்தியில், தேசவிரோதிகளின் மீதான தாக்குதல்களில் கப்டன் முரளி, இரண்டாவது லெப். அலெக்ஸ் ஆகியோருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டான். இத்தாக்குதலில் பல தேசத்துரோகிகள் உயிரிழந்தனர். வியட்னாமிலும், சிங்கராஜா காடுகளிலும் புரட்சிவாதிகள் மேற்கொண்ட தற்காப்பு முறைகளை தமிழீழத்தில் உருவாக்கிய இவன், என்றும் மறக்கப்பட முடியாதவன். அதைவிட ஒவ்வொரு வருடம் பிறக்கும் போதும் தமிழீழ மக்கள் இவனை நினைவுகூரத் தவறமாட்டார்கள். ஏனெனில் இவன் வீரச்சாவெய்திய தினம் ஜனவரி 1. ■

## எங்கள் நினைவு........

வயிறு நோக ஆரம்பிக்க வன்னியில் காரில் ஏற்றப்பட்ட கர்ப்பிணி, யாழ் பெரியாஸ்பத்திரியில் கொண்டு வந்து பிள்ளை பெறும் நிலை மாறி, வாரக்கணக்கில் காத்திருந்தும் வந்து சேர முடியாத நிலையும் சுகதேகியாய் வரும் ஒருவரே, நோயாளியாய் வருவாரோ, பிணமாய் வருவாரோ என்று அஞ்சி ஏங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

குடிபெயர்ந்துவரும் கூழைக்கிடாக்களும், பரந்த கடல்வெளியெங்கும் பறவையினங்களுமாகக் காட்சியளித்த கொம்படிக் கடல் நீரேரியும், இறாலும் கொய்யும் விளைந்துகிடக்கும் ஆனையிறவுக்கடலும், திரளியும் காரலும் நண்டும் திரிந்து விளையாடும் கிளாலி நீர்ப்பரப்பும் எதிரியின் ஆக்கிரமிப்புக்கரங்களால் கவியப்பட்டுவிட்டன. குடாநாடு ஒரு திறந்த வெளிச்சிறையாக மாற்றப்பட்டு விட்டது. இன்று பீரங்கிப் படகுகள் கக்கும் மரணதூதுவர்களுக்கிடையிலேயே, உயிருக்கே உத்தரவாதமற்ற நிலையிலேயே குடாநாட்டுக்கும், வன்னிக்கும் இடையிலே பயணம் செய்யவேண்டியுள்ளது.

தந்தை இறந்தால் கொள்ளி வைக்கப் பிள்ளை வரமுடியாத நிலை. ஆலய வழிபாடுகளும், நேர்த்திக்கடன்களும் உறவு பேணலும், கலை பண்பாட்டுத் தொடர்புகளும் அற்றுப்போகும் நிர்ப்பந்தம். வன்னியில் உற்பத்தியான நெல்லை விற்கமுடியாத நிலை. குடா நாட்டில் அரிசிக்கு ஆலாய்ப் பறக்கும் கொடுமை. வன்னியிலோ கல்வி நலிந்து செல்லும் நிலை. மக்கள் தேவைகளுக்கான அலுவல்களில் ஈடாட்டம்.

தேசத்தைக் குறுக்கறுத்து விரிக்கப்பட்டிருக்கும் இந்த ஆக்கிரமிப்பு காலங்காலமாக நிலைத்திருந்த எமது இழைகளை அறுக்கிறது. தேசம் துண்டு துண்டாக எமது கலை பண்பாட்டு பாரம்பரியங்கள் பிறழ்ச்சியடைய வேண்டிய அபாயத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இது வெறும் அரிசி, மாப் பிரச்சனையல்ல!

தமிழீழ தேசத்தின் வேர்களையே தாக்கும் பிரச்சனை. தொடர்புகள் துண்டிக்கப்படுவதன் விளைவு எமது அடிப்படைகளையே அசைய வைக்கும் வல்லமை கொண்டது என்பதை கணக்கிலெடுக்க வேண்டும். பச்சிலைப்பள்ளியார் இல்லாத பொக்கணைப் பொங்கலும், குடாநாட்டினர் செல்லாத மடுத்திருநாளும், யாழ்ப்பாணத்தார் இல்லாத வற்றாப்பளை அம்மன் விழாவும் எத்தனை வெறுமையானது. வன்னியின் நெல்லும், நெய்யும், தேனும் இல்லாத யாழ்ப்பாணம் எத்தனை அரைகுறையானது. யாப்பாணத்து நாதஸ்வரக் கச்சேரி இல்லாத தான்தோன்றி ஈஸ்வரர் கோவில் திருவிழாவும், வன்னி மண்ணின் நாட்டார் பாடல்கள் இல்லாத குடாநாட்டு மேடைகளும் திருப்திகரமானவையா?

பாதையை மறித்திருக்கும் பகைவன் அகற்றப்பட வேண்டும். அங்கும் இங்கும் ஏரிப்பரப்பில் அலைந்து திரியும் பீரங்கிப் படகுகள் நொருக்கப்பட வேண்டும். எமது தொடர்புகள் மீண்டும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

இது -

தமிழீழத்தின் தேவை: தமிழீழ தேசியத்தின் தேவை; தமிழீழம் வாழ் ஒவ்வொரு தனிமனிதனதும் தேவை.

பாதை திறக்கப்படுவதை நோக்கி தடைகள் உடைக்கப்படுவதை நோக்கி ஒவ்வொரு தமிழரும் தமது நினைவுகளைத் திருப்ப வேண்டும். செயல்முறைகளை நகர்த்த வேண்டும்.

இது ஒரு தேசம். பரந்த எழுச்சியாக ஒவ்வொருவரினது சிந்தனையிலும் செயலிலும் செறிந்துவிட்ட ஒரு இலட்சியமாக மாற்றமடைய வேண்டும். அதுவே எமது தேசியம் தொடர்ந்து பேணப்படக் காணப்படும் ஒரு வழிமுறையாகும்.

பாதை திறப்பது என்பது, இன்னமும் அந்நியன் கடலேரிக்கரையில் குந்தியிருக்க வரிசையில் நின்று, வெயிலில் கருகி, அடிகளையும் உதைகளையும் வசவுகளையும் வாங்கிக் கட்டி, கூனிக்குறுகிப் போகும் வழிமுறையல்ல. எங்கள் உறவுகளுக்கும் தொடர்புகளுக்கும் இடைநடுவே சூரைப்பற்றையாக நிற்கும் படைமுகாம் துடைத்தெறியப்பட வேண்டும். எங்கள் பாதையில் நாங்களாக நெஞ்சை நிமிர்த்தி அச்சமின்றி உலவும் நிலை வர வேண்டும். ■

நன்றி:
வெளிச்சம் - தமிழீழம்

## இரண்டாவது பனி...

ருந்து தங்களைத் தாங்களே பாதுகாப்பதற்காக பொஸ்னியர்கள் ஆயுதம் ஏந்துவதை அமெரிக்கா தடுக்கின்ற அதேவேளை, சேர்பியர்களுக்கு ஆயுதங்களை விற்கும் ரஸ்யாவின் விருப்பத்தை மறைமுகமாக அங்கீகரித்து பொஸ்னிய முஸ்லீம்களின் இன அழிவுக்கு உதவுகின்றது.

சுருக்கமாகச் சொன்னால், முன்னர் சோசலிச நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் என்னமாதிரி கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபட்டதோ அதேபோன்று இப்போது, இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கும் அதற்குச் சார்பான அரசுகளுக்கும் -அமைப்புக்களுக்கும் எதிராக நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதேவேளை, சந்தர்ப்பம் ஏற்படும்போது தனது படைபலத்தையும் பிரயோகித்து அவற்றை நசுக்கவும் முயல்கின்றது. ஆனாலும் மேற்குலக படைபலத்தின் இரைச்சலுக்குச் சவால் விட்டபடி, இஸ்லாமிய அடிப்படை வாதம் முஸ்லீம் நாடுகளில் பரவிவருகின்றது. ■